Registered No. M. 2330

"SIDDHANTHAM"

Vol 42 — No. 8

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 42 | சௌமிய ஆவணி 1969 ஆகஸ்டு | இதழ் 8

உள்ளுறை

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,

துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குமாரகுருநாத முதலி தெருவி லுள்ள சமாஜ அலுவலகத்தில் 31—8—69 ஞாயிறு காலை 9-30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, மாதக் கூட்டம், ஆண்டு விழா முதலியன பற்றி ஆலோசிக்கப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக் கொள்ளப்பெறுகின்றனர்.

நம் சமாஜச் சார்பில் திருவாளர் அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் நன்கொடையான நம் சமாஜக் கட்டட டிரஸ்டின் ஆதரவில் 22-7-69 அன்று திருமயிலைக்கபாலீச் சரத்தில் பேராசிரியர், வித்துவான் பாலூர்கண்ணப்ப முத லியார் எம். ஏ., எம். ஓ. எல். அவர்கள் சுந்தரர் செந்தமிழ் பற்றிச் சிறந்த விரிவுரையாற்றினர்கள்.

நம் சமாஜ ஆயுள் உறுப்பினர்களாக புலவர் திரு. தங்க வேலன் அவர்களும் ("திருமுருகன் இல்லம்", நேரு நகர், புன்செய் புளியம்பட்டி அஞ்சல், கோவை மாவட்டம்.) புலவர் திரு. பொன். கணேசனர் அவர்களும் (தமிழாசிரியர், இராசாத் தெரு, புன்செய்ப்புளியம்பட்டி, கோவை மாவட் டம்) சேர்ந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரி வித்துக் கொள்கின்றோம்.

கோவை சிங்காநல்லூரில் தெய்விகப் பேரவையின் சார் பில் செல்லாண்டியம்மன் திருக்கோயிலில் 3ஆம் ஆண்டுவிழா 19-7-69ல் நிகழ்ந்தது. தவத்திரு குன்றக்குடி அடிகளார், தவத்திரு சுந்தர அடிகளார் ஆகியோர் கலந்து அருளுரை கள் ஆற்றினர்.

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகச் சார்பில் 6-7-69, 27-7-69ஆம் நாள்களில் காஞ்சிச் சிவதலவார வழிபாடும் 22-7-69ல் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநாளும் 23-7-69ல் மெய்கண்டதேவ நாயனர் ஆடி சுவாதித் திருநாளும் சிறப்புற நிகழ்ந்தன. புலவர்மாமணி திருஞானசம்பந்த முதலியார், திரு. தணிகையரசு முதலியோர் விரிவுரைகளாற்றிச் சிறப் பித்தனர்.

திரிசிரபுரச் சைவ சித்தாந்த சபையின் சார்பில் 20-6-69ல் மாணிக்கவாசகர் திருநாளும் 22-7-69ல் சுந்தரர் திருவிழாவும் 27-7-69ல் கந்தபுராண விரிவுரை நிறைவு விழாவும் சபைக் கட்டிடத்தில் சிறப்புற நிகழ்ந்தன.

Reg. M. 2330 உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணிலையடீ நாடு.

மலர் 42	சௌமிய ஞூ ஆவணி 1969 ஆகஸ்டு	இதழ் 8

ஒரு சித்தாந்த சாத்திர ஏடு

ஆசிரியர்.

"அச்சுப் புத்தகங்கள் மிகவும் பெருகிவிட்ட இக் காலத்தில் ஏட்டுப் பிரதிகளைத் தேடுவதால் என்னபயன்?" என்று பலர் கேட்கிறார்கள். தேடிப்பார்வை யிடுவது மிகவும் பயனுள்ளதாய் இருக்கிறது என்பதே இதற்கு விடை. இதற்குச் சான்று பகர்வதுபோல, சமீபத்தில் (31—1—69) அன்று யாம் தேடிப் பெற்ற, ஒரு சித்தாந்த சாத்திர ஏடு அமைந்திருக்கிறது.

திருப்புடைமருதூர் (திருநெல்வேலி ஜில்லா) சதாசிவ தேசிகர் மடத்தில் இருந்தது என்று சொல்லி ஓர் அன்பர் 'சாத்திரக் கொத்து' என்ற பெயரமைந்த ஓர் ஏட்டை உதவினர். அதை ஆராய்ந்தபோது அதில் பின்வரும் சாத்திரங்கள் இதே முறையாக எழுதியிருக்கக்கண்டோம்; சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபா இருபது, சதமணிக்கோவை, சிவப்பிரகாசம் கொளுவுடன், போற்றிப் பஃறொடை, நெஞ்சுவிடுதூது (இந்த இடத்தில் ஓர் ஏடு விடுபட்டுள்ளது; அதில் வினா வெண்பாவும், கொடிக்கவியும் இருந்தனபோலும்), திருவருட்பயன், உண்மைநெறி விளக்கம், உண்மை விளக்கம் இதனோடு சித்தாந்த சாத்திரப் பகுதி முடிகின்றது. ஏடு மிகவும் பழைய ஏடு.

இந்தச் சாத்திரங்களின் முறைவைப்பு நன்கு கவனிக்கத் தக்கது. இத்தொகுப்பில் திருவுந்தியார், திருககளிற்றுப்படியார் என்ற இரண்டும் காணப்பட வில்லை. சங்கற்ப நிராகரணம் இல்லை; ஒருகால் இச்சாத்திர எடு தொகுத்து வைத்துக் கொண்டவா தமக்குத் தேவை யில்லையென இவற்றை ஒதுக்கிவிட்டார் என்று நாம் எண்ணலாம் கிடைக்கின்ற பகுதியை மட்டும் இங்கு ஆராய்வோம்.

ஆராய்வதற்குமுன் ஒரு குறிப்பைக்கூற விரும்பு கிறோம். சந்தானசாரியர் நால்வர் மெய்கண்டார், அருள் நந்தி சிவாசாரியர், கடந்தை மறைஞான சம்பந்தர், கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியர் என்போர். இந் நால்வரில் மறைஞான சம்பந்தர் ஆசாரிய பதவியில் இருந்தாரே ஒழிய, எந்தநூலும் செய்யவில்லை என்பது பொதுவாய் வழங்கும் கருத்து. மற்றமூவர் செய்த சாத்திர நூல்கள் சித்தாந்த சாத்திரத் தொகுதியுள் சேர்ந்திருக் கின்றன.

இதுபற்றி 1961 இல் பழனியில் நடந்த சைவ சித்தாந்த சமாஜ மகாநாட்டில் விரிவாகப் பேசினோம் பின்னர் இது பற்றியே விளக்கமாக சித்தாந்தம் பத்திரிகையில் எழுதினோம் (1963, தொகுதி 36 பக்கம் 241–248 பார்க்க) எமது கருத்து, மறைஞான சம்பந்தர் சிறந்த சித்தாந்த நூலாகிய சதமணிக் கோவையைப் பாடினார்; அக்கோவை யும் சித்தாந்த சாத்திரங்களில் சிறப்பான ஒன்று என்பது. இக்கருத்துக்கு ஆதாரமாக உமாபதி சிவத்தின் மாணக்கர் ஆகிய அருள் நமச்சிவாயர் செய்த ஞானபூசைத திரு விருத்தம் என்ற சாத்திர நூலையும் தருமபுரம் சம்பிரதாய தீபத்தையும் எடுத்துக்காட்டி யிருந்தோம். சதமணிக் கோவையைச் சிவஞான சுவாமிகள் இருமுறை பிரமாண நூலாக எடுத்துக்காட்டி யிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போது கிடைத்த இந்த ஏடானது, எம்முடைய கருத்துக்கு ஆதரவு தருகிறது. இங்கு சாத்திரங்கள் பெயர் கூறும் வரிசை முறையில் மெய்கண்டார், அருள் நந்தி இருவரின் நூல்களைக் குறிப்பிட்டு அடுத்து சதமணிக்

கோவையைச் சொல்லி அதன்பின் உமாபதியார் நூல்களைச் சொல்லியிருக்கக் காண்கிறோம். இதனால் பெறுவது என்ன வென்றால், மூன்றாவது சந்தான ஆசாரியரான மறைஞான சம்பந்தரே சதமணிக்கோவையைச் செய்தார் எனபது இவ்வாசிரியர் கருத்து என்பதாகும்.

இதுபற்றி, ''பதினான்காம் நூற்றாண்டுப்புலவர் வரலாறு'' A என்ற எமது நூலில் ''சைவ இலக்கியம்'' என்ற அத்தியாயத்தில் யாம் எழுதியுள்ள ஒரு பத்தியை மட்டும் இங்கு எடுத்துக் காட்டி இக்கட்டுரையை முடிக்கிறோம் (பக்கம் 139)

"இடையில் எக்காரணத்தாலோ சாத்திரங்களின் பயிற்சி குன்றிய காலத்தில், சத மணிக்கோவையின் பயிற்சியும் குன்றி அதன் ஆசிரியர் பெயரும் மறந்துபோய், மறைஞான சம்பந்தர் எந்த நூலும் செய்யவில்லை என்ற வழக்கும் ஏற்பட்டது. இதை இங்கு ஆராய்தல் தகும். சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு என்ற வழக்கு மிகவும் பிற்காலத்தில் ஏற்பட்டது. 'உந்திகளிறு' என்ற பாடலே இவ்வழக்கத்தைத் தோற்றுவித்தது. 1866 இல் சைவ சித்தாந்த சாத்திரங்களை முதன் முதலில் அச்சிட்ட மதுரை நாயகம்பிள்ளை என்பவர் இப்பாடலை அச்சிட்டார். இது எந்த ஏட்டிலும் காணப்படவில்லை. (நினைவு படுத்திக் கொள்ள எளிதாயிருக்கும் பொருட்டு இவரே இப்பாடலைச் செய்தார் போலும்) இந்தக் காலத்திலிருந்து தான் 'பதினான்கு' என்ற வரையறை தொடங்குகிறது என்று தெரிகிறது. அக்காலத்தில் சாத்திரப் பயிற்சி குன்றி இருந்தமையால், சதமணிக்கோவையின் பயிற்சியும் குன்றி யிருந்தது. பதினான்கு என்ற வரையறை செய்தவர்கள் சதமணிக் கோவையை மறந்துவிட்டார்கள். பதினான் கனுள் சீகாழிதத்துவ நாதர் செய்த உண்மைநெறி விளக்கம் கொள்ளப் பட்டு வருகிறது. ஆனால் இதை விலக்கித் துகளறு போதத்தைக் கொள்ள வேண்டும் என்று அனவரத விநாயகம் பிள்ளை முதலியோர் கருதினார் கள். இன்னும் நுணுகிப்பார்த்தால் பதினான்கினுள் ஒன்றாக சதமணிக்கோவையைச் கூட்டி, பின்வந்த நூல் களாகிய துகளறு போதம், உண்மை நெறி விளக்கம்

என்ற இரண்டையும் பதினன்கினுக்கு மேற்பட்டனவாகக் கொண்டு சாத்திரங்கள் பதினறு என்று முடிவு செய்வதே பொருததம்; ஆனல் வழக்கை மாற்றுவது எளிதான காரியமா?''

முன்னமே பல இடங்களில் இக்கருத்தை யாம் தெளிவு படுத்தியிருப்பதால் இங்கு அதிகம் விவரிக்கவில்லை: எனினும், இன்னும் ஏடுகள் தேடுவதால் எவ்வளவு சிறந்த பலன் உண்டு என்பதைக் காட்டுவதற்காக மட்டுமே இக் குறிப்பை இங்குத்தருகிருேம்.

மெய்கண்டார் நூலைச் சிறப்பிக்கும் "வேதம் பசு" என்றபழம் பாடல், பின்வரும் பாடமுடையதாய் இவ் வேட்டில் காணப்படுகிறது.

வேதம் பசுஅதன்பால் மெய்யா கமம்அவற்றின்
ஓதும் திருப்பாட்டே உள்ளுறுநெய்–தீதிலா
நெய்யின் சுவையாகும் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
சைவத்தால் ஆய்ந்த தமிழ்.

சைவப்பெரியார் தாம்பரம் நடேச முதலியார்

பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், எம். ஏ.

(சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையின் 66–ஆம் ஆண்டு விழா 1969–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 26, 27 நாள்களில் சபைக்கட்டிடத்தில் நடை பெற்றது.

26—4—69-ல் மகா வித்துவான் மே. வீ. வேணு கோபாலப் பிள்ளை அவர்கள் தலைமையில் கூட்டம் நடை பெற்றது. அதுபோது சைவப்பெரியார் ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் திரு. நடேச முதலியார் அவர்களுக்குப்

பொன்னாடை போர்த்தித் திரு. நடேச முதலியார் அவர்களின் அறப்பணிகளைப் பாராட்டினர்கள். அதன்பின் திரு. பூ ஆலாலசுந்தரம் செட்டியார் அவர்கள் நடேச முதலியார் அவர்களின் அரிய தொண்டுகளைப் பாராட்டிப் பேசினர்கள். அப்பேச்சின் சுருக்கம் ஈண்டு எழுதப்பட்டுள்ளது.)

என் அருமை நண்பர் திருவாளர் ச. நடேச முதலியார் அவர்களின் அன்பினையும் நட்பினையும் யான் கடந்த 35 ஆண்டுகளாகப் பெற்றுள்ளேன். 1934–ஆம் ஆண்டில் சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் என்னைச் சைவ சித்தாந்த சமாஜ செயற்குழு உறுப்பினருள் ஒருவனாகச் சேர்த்தார்கள். அதுமுதல் திரு. வி. க., திரு. வி. உலகநாத முதலியார், திரு. மா. பாலசுப்பிரமணிய முதலியார் போன்ற அறிஞர் பெருமக்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. 86–வயது நிரம்பப் பெற்ற திரு. ச. நடேச முதலியார் அவர்களை நாங்கள் தாம்பரம் அப்பர் சுவாமிகள் என அழைப்பதுண்டு. திரு. முதலியார் அவர்கள் அப்பர் சுவாமிகளைப் போன்று மன உறுதியும் தொண்டு மனப்பான்மையும் மிக்கவர்.

ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையின் கட்டிடத்திற்குத் திரு. முதலியார் அவர்கள் தூண்போன்றவர்கள். திரு. முதலியார் அவர்களின் சீமந்த விழாவில் அவரது தந்தையார் திரு. சபாபதி முதலியார் அவர்கள், திரு. வி. க. அவர்களின் அறிவுரையின்படி சபையின் கட்டிடத்திற்கு ரூ. 100 அளித்தார். அச்சபையில் நடைபெறும் ஒவ்வொரு விழாவினையும் திரு நடேச முதலியார் அவர்கள் மிகப் பொறுப்புடன் நடத்தி வந்தனர் என்ற செய்தி திரு. வி. க. அவர்கள் எழுதிய வாழ்க்கை வரலாறு புத்தகத்தின் வாயிலாக அறியக்கிடக்கின்றது. அந்நூலிலுள்ள சில வரிகளைக் காண்போம்.

"நடேச முதலியார் வீர்வாகத்திறம் எனக்கு மகிழ்ச்சியும் வியப்பும் ஊட்டும். விழாக்காலங்களில் நடேச முதலி

யார் கவலை செலுத்துகின்றார் என்னுஞ்செய்தி என்காதுக்கு எட்டினால் என் கவலை நீங்கும்'' (திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புக்கள் பக்கம் 926)

திரு. முதலியார் அவர்கள் நீண்ட ஆயுள் பெற்றிருப்பதன் காரணம் அவரது அயரா உழைப்பாகும். அவர் பல மைல்கள் நடந்தே செல்வார். திரு. வி. க. அவர்கள் இதையும் பாராட்டியுள்ளார்.

"எனக்குப் பல துறையில் நண்பருளர். நடேச முதலியார் நடக்கை நண்பராயினர். எங்கள் இருவரையும் அதிகாலையில் தேனாம்பேட்டை ஏரி விளிக்கும். அவ்வேரியை நாங்கள் வலம் வருவோம். ஞாயிற்றொளியிலுங் காற்றிலும் மூழ்குவோம்'' (திரு. வி. க. வாழ்க்கைக்குறிப்புக்கள் பக்கம் 925)

ஸ்ரீ பாலசுப்பிரமணிய சபையின் வைர விழாமலர் திரு. நடேச முதலியார் அவர்களின் பெருமுயற்சியாலும் நன்கொடையாலும் வெளிவந்தது என்பதைச் சபையினர் அறிவர்.

திரு. முதலியார் அவர்கள் சென்னைச் சைவசித்தாந்த சமாஜத்தின் செயற்குழு உறுப்பினராகப் பல ஆண்டுகள் தொண்டாற்றியுள்ளனர். சமாஜ மாநாடுகளுக்குந் தவறாமல் வருவார்கள்.

கிழக்குத் தாம்பரம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஸ்ரீ கந்தப் பெருமானார் திருக்கோயில் ஆட்சிக்குழுவில் அவர் பல ஆண்டுகள் உறுப்பினராக இருந்து அக்கோயிலில் பல திருப்பணிகள் செய்துள்ளார்கள். ஸ்ரீ வள்ளிதேவசேனா சமேத ஸ்ரீ முருகப்பெருமான் மூலவர் திருவுருவம் அவர்களே செய்து வைத்தார்கள். ஸ்ரீ முருகப்பெருமான் உற்சவர் திருவுருவமும் அவரது முயற்சியால் அமைக்கப்பட்டது. ஸ்ரீ முருகர் ஸ்ரீ மீனாட்சி அம்மையார் ஸ்ரீ சுந்தரேஸ்வரர்

ஆகிய மூன்று சன்னதிகளுக்கும் திரு. முதலியார் அவர்கள் மூன்று கோபுரம் கட்டியுள்ளார்கள். தமது நிலத்தை விற்றுக் கோயில் முகப்பில் ஒருபெரிய மண்டபம் கட்டியுள்ளார்கள். 67-ஆம் ஆண்டு கோயிலில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அவர் கும்பாபிஷேகச் செயற்குழுவின் துணைத்தலைவராக இருந்து பல அரிய திருப்பணிகள் செய்துள்ளார்கள். தாம்பரம் ஸ்ரீ கற்பக விநாயகர் சபையை அவர் 1946-ஆம் ஆண்டு தோற்றுவித்து அதன் வாயிலாகச் சைவச் சொற்பொழிவுகள் அக்கோயிலில் நடைபெறும்படி செய்தார்கள்.

திரு. முதலியார் அவர்கள் மறைமலையடிகள் ஸ்ரீபாம்பன் சுவாமிகள் முதலியவர்களோடு நெருங்கிப்பழகி அவர்களுக்குத் தொண்டு செய்தவராவர்; திரு. முதலியார் அவர்கள் எனக்குத் தந்தைபோன்றவர்கள். எங்கள் குடும்பத்தின் நெருங்கிய நண்பர். அவர் இன்னும் பல்லாண்டுகள் சிறந்து வாழ்ந்து பல அரிய தொண்டுகளைச் செய்யுமாறு எல்லாம் வல்ல ஸ்ரீ நடராஜப் பெருமானை இறைஞ்சுகின்றேன்.

திருத்தணிகைச் சந்நிதி முறை

(அம்பை. சங்கரனார்)

நம் அமிழ்தினுமினிய தமிழ்மொழியதனில் சிறு பிரபந்தங்களாக 96 வகை உண்டு என அறிஞர் கூறுவர். அவை கோவை, உலா, அந்தாதி, தூது, கலம்பகம் போன்றனவாம். பின்னர் ''சந்நிதி முறை'' என்னும் வகையிலும் ஒரு பிரபந்த வகை ஏற்படலாயிற்று. அப்பிரபந்த வகையை முதன் முதலில் படைத்து அளித்த பெருமை திருப்போரூர்ச் சிதம்பர சுவாமிகளையே சாரும்.

இற்றைக்கு 400 ஆண்டுகளுக்கு முன்னர் அவதரித்தருளிய சிதம்பர சுவாமிகள் திருப்போரூர் முருகன் சந்நிதியில் முறையிட்ட, பிறராலும் முறையிடத்தக்க அருமை

யான பாக்களடங்கிய தொகுதியே திருப்போரூர்ச் சந்நிதி முறையாகும். இந்நூலை யொட்டியே திருத்தணிகைச் சந்நிதி முறையும் ஏற்படலாயிற்று.

இவையிரண்டிற்கும் பின்னர் கம்பைச் சந்நிதி முறை என்னும் நூலொன்று மிருப்பதாகத் தெரிகிறது. இரங்கூன் அருகிலுள்ள முருகன் தலம் கம்பார் என்பதாகும். அதன் பருடமொழி கம்பை என்பது. நாட்டுக்கோட்டைச் செட்டியார்களால் நன்கு வழிபடப்பட்டுப் பெருமையுற்றதலம் அஃதாம். அத்தலத்துள்ள முருகனைப் போற்றிப் பாடப் பெற்றது கம்பைச் சந்நிதி முறை சோணாசல பாரதி என்னும் புலவர் பெருமகனரால் அந்நூல் இயற்றப்பட்டது. 1905ஆம் ஆண்டு கலாரதனம் அச்சகத்தில் அது வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது. அந்நூற்குப் பின்னர் இறைவன் பெருமை குறிப்பிடத்தக்க சந்நிதி முறைப் பிரபந்தம் 1963ல் அச்சடிக்கப்பெற்ற முருகைய பங்கஜாக்ஷி என்னும் பெண்பாற்புலவரால் பாடபெற்ற திருச்செந்தில் முருகன் சந்நிதி முறையாகும். அதன் பின்னர் வேறு யாதொன்றும் தோன்றியதாகத் தெரியவில்லை. ரமண சந்நிதி முறை முதலியன பெரியோர்களைப் பற்றிப் பாடப் பெற்றன.

திருத்தணிகை மீது வளர் முருகப் பெருமான் சந்நிதியில் அன்பர்கள் முறையிடற்குரிய அருமையான பாக்கள் 657ம் உலாவாக உள்ள பகுதியில் 649 கண்ணிகளுமாகச் சேர்ந்து மொத்தம் 1306 பாக்கள் இத்திருத்தணிகைச் சந்நிதி முறையில் அடங்கியுள்ளன. இந்நூலை திருத்தணிகையிலேயே 18ஆம் நூற்றுண்டில் வாழ்ந்து சிறந்த புலமை மிக்கோங்கிய பெரும் புலவர் கந்தப்பையர் என்னும் பெரியார் இயற்றியருளினுர். இவர்தான் திருத்தணிகை விசாகப் பெருமாளையர், சரவணப் பெருமாளையர் ஆகிய புலவர் பெருமக்களின் அருமைத் தந்தையார் ஆவர். இவர் இச்சந்நிதி முறையை முன்னோர் நூலின் முடிபொருங் கொத்துப் பாடியதோடமையாது மேலும் பின்னோர் வேண்டும் விகற்பங்களையும் அமைத்து மிக அழகுறப்பாடிய திறம் அறிந்து அறிந்தின்புறத்தக்கது.

பிள்ளைத் தமிழ் மாத்திரம் இரு சந்நிதி முறைகளிலும் தொடக்கமாக அமைந்துள்ளன. பின்னர் திருப்போரூர்ச் சந்நிதி முறை திருவாசகத்தை அடியொற்றி திருப்பள்ளி யெழுச்சி, ஊசல், அடைக்கலப்பத்து முதலிய பகுதிக ளோடு பிற பகுதிகளையும் கொண்டு 727 பாடல்களாக வெளிவந்துள்ளது.

திருத்தணிகைச் சந்நிதி முறையோ பிள்ளைத்தமிழ், ஐங்கரமாலை, தயாநிதிமாலை, வேலாயுதசதகம், அந்தாதி, கலம்பகம் என 6 சிறு பிரபந்த வகைகளைத் தன்னுள் அடக்கி முதலில் மிளிர்கின்றது. இவ்வாறு பிரபந்தங் களிலுமுள்ள பாடல்கள் 607. மேலும் மயில்பத்து, சேவல் பத்து, வேல் பத்து, சீர்பாதப்பத்து, தணிகைமலைப் பத்து என ஐந்து பத்துக்களில் 50 பாக்கள் உள்ளன. ஆகமொத்தம் 657 பாடல்களிருப்பதோடு இச்சந்நிதி முறை யின் கடைசிப் பகுதியில் திருத்தணிகை யுலா என்னும் ஓர் அருமையான பிரபந்தமும் விளங்கி இந்நூலை மிக அழகு செய்கின்றது. இவ்வுலா 649 கண்ணிகளையுடையது.

கந்தப்பையர் அவர்கள் திருத்தணிகைப் பெருமானையே தம் வழிபடு கடவுளாகக் கொண்டு வழிபட்டவராதலின் அப்பக்திப் பெருக்கால் தோன்றிய அமுதப் பாடல்களே இச்சந்நிதி முறையில் யாண்டும் காணப்படுகின்றன. இவை படிப்போரைப் பரவசப்படுத்திப் பக்திவலையிற் செலுத்தவல்லன என்பதைப் படித்தார் அறிவர். முன்னோர் அடியொற்றிச் செல்லவேண்டுமென்பதற் கொப்ப இந்நூலில் முதலில் பிள்ளைத் தமிழிருக்கினும் விநாயக வழிபாடு முதலில் கொள்ளத்தக்கதென மனத் துட்கொண்டு அதற்கெனவே திருத்தணிகை வளர் விநா யகப் பெருமானைப் போற்ற திருத்தணிகை ஐங்கரமாலை என்னும் பகுதியை இரண்டாமிடத்தில் வைத்துள்ளது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். தயாநிதிமாலை, அந்தாதி, கலம்பகம் முதலிய யாவும் திருத்தணிகை முருகன் பெரு மையை மிக அழகு பொருந்தப் பேசுகின்றன.

மேலும் வேலன் பெருமை பற்றிக் குறிக்க வேலாயுத சதகம் என 101 பாக்களடங்கிய பகுதி இச்சந்நிதிமுறையி

விடம்பெற்றுள்ளது. முருகனுக்குரிய மயிலையும் சேவலை யும் வேலையும் தனித்தனியே போற்றப் பப்பத்துப் பாக்கள் மிக அழகாக வுள்ளன.

சீர்பாதப்பத்தில் முருகன் திருவடிப் பெருமையையும் தணிகைமலைப்பத்தில் திருத்தணிகைச் சிறப்பையும் காண லாம். முருகன் எழுந்தருளும் காட்சி முதலிய பல சிறப் புக்களையும் இந்நூலினிறுதியில் உள்ள உலாவில் கண்டின் புறலாம்.

இத்தகைய அருமையான நூல் 65 ஆண்டுகளுக்குமுன் (1904) சிறுமணவூர் முனிசாமி முதலியார் அவர்களால் தமது சிவகாமி விலாச அச்சுக்கூடத்தில் டிம்மியளவில் அச்சிடப்பட்டுள்ளது. இதற்கு முன்னே பின்னே கிரௌ னுக்கும் குறைந்த அளவில் அச்சிடப்பட்ட ஒரு பதிப்பும் வெளிவந்துளது. இவற்றிற்குப் பின்னர் இந்நூல் திருப் போரூர்ச் சந்நிதிமுறை போன்று பலர் கையிலும் இருக்கத் தக்க நிலையில் பரப்பப்படவில்லை. இதன் பெருமையை யறிந்து தேவத்தானத்தாரோ அல்லது தக்க நன்மன முடைய செல்வந்தர்களோ அச்சிட முன்வந்தால் பேருப காரமாயிருக்கும்.

முதலிரு முறை யச்சிட்டதோடு இந்நூல் அமைந்து விட்டது. இன்னும் சின்னாளுக்குள் மறு அச்சுக் கிந்நூ லைக் கொண்டுவாராதிருக்கின் இதுவும் மறைந்துவிடற்கேது வாகும். ஆகவே இது வெளிவந்துலவ அன்பர்கள் ஆவன கருதுவார்களாக.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதற் கொப்ப இத்திருத்தணிகைச் சந்நிதிமுறையில் சில பாக்க ளின் பெருமையை மட்டும் எடுத்துககூறி அதை மக்கள் அறிந்துணர்ந்து படிக்க வாய்ப்பூட்டுவல்

சிறப்பொடு பூசை புரிகிலே னெனினும்
சினகரம் வலம்புரி யாமல்
மறப்பொடு நிலத்தில் துட்டரோ டிணங்கி
வாய்மையைப் புகலகிலே னெனினும்

பிறப்புட னிறப்பாங் கடலமுந் தாமற்
பிரசமா மலர்ப்பதந் தருவாய்
அறப்பணி புரிவோர்க் கருடிருத் தணிகை
ஆறுமா முகதயா நிதியே

இது தயாநிதி மாலை என்னும் பகுதியிலுள்ள செய்யுளாகும். இதனைப் போன்றே பிற செய்யுள்களும் உருக்கம் அமைந்தவையாயும் எளிமையாயும் உள்ளன.

தொடையேறு செந்தமிழ் பாடியே
தொழுதுங் கொடாதவர் வாழ்தலைக்
கடையேறி யிங்கிர வாமலே
கழலார்ந்த சிற்றடி நல்குவாய்
மடையேறி நந்தின மூர்ந்திடும்
வயல்சூழ் திருத்தணி காசலா
விடையேறி யின்புறு பாலனே
வேலாயு தாவே லாயுதா.

என்பது வேலாயுத சதகத்திலுள்ள ஒரு செய்யுளாகும்.

தூவியந் தோகை மயிலே
சொல்லுவல் யானென்று கேண்மோ
பாவிய ருள்ளெனின் மிக்கோர்
பாரிடை யாவரு மில்லை
கூவி வலியவந் தாளும்
கொள்கையெந் நாளென்று கேட்போம்.
காவியந் தண்கிரி மேய
காங்கேய னைக்கொண்டு வாராய்

என்பது மயிற்பத்திலுள்ள ஒரு செய்யுளாகும் இவ்வாறு அருமையான செய்யுள்களைக் கொண்ட இத் திருத்தணிகைச் சந்நிதி முறையைப் படித்து இன்புற்று மக்கள் சிறந்துமிக்கோங்குவார்களாக.

வாழ்க உலகெலாம்

மாணிக்க வாசகரும்

அவர்தம் வாசகமும்

(புலவர் அ. சிதம்பரம்)

உலகில் வாழும் உயிர்களில் மக்கள் உயிர்க்குள்ள சிறப்பு, அவ்வுயிர் பெற்றுள்ள சிந்தனையே சிவன் சீவனுக்குச் சிந்தனைத் திறனை அளித்தது தெளிவு பெறுவதற்கே. சிந்தித்துத் தெளிந்து, சிவனுண்மையை உணர்ந்து, அவனை அடைவதற்குரிய நெறிகளை அறிந்து, அந்நெறியில் ஒழுகி, அவனோடு கலத்தலே இப்பிறவி பெற்றதன் பயனாகும். 'நால்வர் சென்றவழி செல்க' என்று ஞாலத்தில் ஒரு முதுரை உண்டு. அந்த நால்வராகிய சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஞாலம் உய்ந்திட நாட்டிய நல்ல நெறியே சைவநெறி. 'பாம்பின்கால் பாம்பறியும்' என்ற பழமொழிப்படி பக்தனுடைய சிறப்பைப் பக்தனே அறிவான்; கவிஞனுடைய சிறப்பைக் கவிஞனே அறிவான். நால்வருள் ஒருவராகிய மாணிக்கவாசகரைப் பற்றி, திருவருட் பிரகாச வள்ளலாராகிய இராமலிங்க அடிகளும் சிவப்பிரகாச அடிகளும் பாடியுள்ள வற்றைப் பார்ப்போம்.

ஆசகன்ற அநுபவம்நான் அநுபவிக்க அருளுதி

நால்வர் பாடல்களைப் பாடிப் பரவச மடைந்து, அவர்கள் காட்டிய நெறியிலொழுகிய அருட்பிரகாச வள்ளலார், பரமனைப் பல்லாயிரம் பாடல்கள் பாடிப் பரவினர் பரமனைப் பாடிய தோடன்றிப் பரமன் அடியார்களையும் பாடியுள்ளார் அவர், "மாணிக்கவாசகனே! ஆனந்த வடிவான மாதவனே! நீ திருவாய் மலர்ந்த தமிழ் மறையின் அநுபவத்தை நான் அநுபவிக்க அருளுதி" என்று வேண்டுகிறார். இராமலிங்கர் திருவாசகத்தைத் 'தமிழ் மாமறை' என்று குறிப்பிடுகிறார். ஏன்? வடமொழி வேதங்கள் கடவுளைப்பற்றி விளக்குவது போல தமிழில் கடவுளைப் பற்றி விளக்கும் நூலாகத் திரு வாசகம் உள்ளமையால் அதைத் தமிழ் மாமறை என்று குறிப் பிட்டார். மாணிக்கவாசகரே! உம்பாடல்களைப் பாடுவது

மட்டும் போதாது; நீர் அநுபவித்த அநுபவத்தை நான் அநுபவிக்க வேண்டும்; அது நீர் அருள் செய்தால்தான் கிடைக்குமென்பார், ''ஆசகன்ற அநுபவம் நான் அநுபவிக்க அருளுதியே'' என்று வேண்டுகிருர்.

கற்புடையாள் இன்பினும் இன்பெய்துவதே

இரு புருவங்களுக்கிடையே நோக்கை ஒருமுகப்படுத்தித் தியானித்து, நீண்ட காலந் தவஞ்செய்தவர் பலர்; அவ்வாறு தவஞ்செய்து எலும்புருவாயினர் பலர்; அவர்களெல்லாம் ஆண்டவனை அடையவில்லை; அவர்கள் அனைவரும் ஏமாற்ற மடைய, மாணிக்கவாசகரே! நீர் அன்புருவம் பெற்றீர்; அதன் பின் அருளுருவம் பெற்றீர்; அதன்பின் இன்புருவம் பெற்றீர். என்று ஆண்டவனோடு அவர் இரண்டறக் கலந்த நிலையை இராமலிங்க அடிகள் விளக்குகிருர். 'வாதவூர் நாயகனே! ஒரு முறை வந்து என் வாட்டமெலாம் மாற்றுவாயாக' என்று வேண்டுகிருர். வள்ளல் இராமலிங்கர் மணிவாசகரின் வாசகத்தை எண்ணிப் பார்க்கிருர். எண்ண எண்ண, அவர் இதயம் இன்பம் நிறைந்து பொங்குகிறது; தான் பெற்ற அந்த இனபப் பெருக்கை யாவரும் உணருமாறு பாட்டில் வடிக்கிருர். ''காமமிகு காதலன்றன் கலவிதனைக் கருது கின்ற ஏமம்உறு கற்புடையாள் இன்பினும் இன்பு எய்துவதே'' என்பது அப்பாட்டின் ஒருபகுதி; கணவனுடைய கலவியை (சேர்க்கையை) விரும்புகிறவள் கற்புடையவளாக இருக்கவேண்டும்; கணவன் ஒருவனுக்கே தன் உடல் பொருள் உயிர் அனைத்தையும் உரிமைப்படுத்தியவளாக இருக்க வேண்டும். கற்பில்லாதவள் கணவனோடு கூடி நிறைந்த இன்பத்தைப் பெறமுடியுமா? அவள் கற்புடையவளாக இருந்தால் மட்டும் போதாது. அவள் கணவன், அவள்மேல் காதல் உடையவனுகவும் இருக்கவேண்டுமென்பார், கணவனைக் காதலன் என்ற சொல்லால் குறிப்பிடுகின்ருர். அவன் காதலனுக இருந்தால் மட்டும் போதாது; காம உணர்ச்சி மிக்கவனுகவும் இருத்தல் வேண்டும்; அத்தகையவன் கலவியே நிறைந்த இன்பத்தை அளிக்கும் என்பார், காமம் மிகு காதலன் என்ருர். மேலும் மனைவியை 'ஏமம்உறு கற்புடையாள்' என அடைமொழி சேர்த்துக் கூறி யுள்ளார். அவள் பாதுகாப்பு மிக்கவள் எனக் குறிப்பிடு

வதற்காக ஏமம் உறு கற்புடையாள் என்றார். காமம் மிகு காதலன்றன் கலவிதனைக் கருதிப் பெற்று அநுபவிக்கும் இன்பம் போல உள்ளதென்று கூடக் கூறவில்லை. அந்த இன்பத்தைவிட திருவாசக இன்பம் மிகுதியாக உள்ள தென்கிறார்.

வாசகம் உவட்டாமல் இனிப்பது

திருவருட் பிரகாச வள்ளலார், திருவாசகம் மிக இனிக்கிறது என்கிறார்; உவட்டாமல் இனிக்கிறது என்கிறார்; பொதுவாக இனிப்புச் சுவைப் பொருளை நிரம்ப உண்டால் உவட்டும். திருவாசகத்தை எத்தனை முறை சுவைத்தாலும் உவட்டாமல் இனிக்கிறது. மேலும் இனிப்புச்சுவை நாக்கில் மட்டும் இனிக்கும். திருவாசகத்தின் இனிமையோ, ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் (தெவிட்டாமல்) இனிக்கிற தென்கிறார். திருவாசகத்தின் இனிமைக்கு உவமையாக ஒரு கலவையின் இனிமையைக் குறிக்கிறார். அந்தக் கலவை யாது? கருப்பஞ்சாற்றிலே தேனையும் பாலையும் கனிகளின் சாறுகளையுங் கலந்த கலவை; அந்தக் கலவையின் இனிமை போலத் திருவாசகம் இனிக்கிறது என்கிறார். 'எப்பொழுது இனிக்கிறது?' என்று வினவுவார்க்கு விடை யிறுப்பார்போல, திருவாசகத்தைப் பாடுங்கால்' என்கிறார். பாடுங்கால் என வாளா கூற வில்லை; 'கலந்து பாடுங்கால்' என்று கூறுகின்றார். நாம் வேறு திருவாசகம் வேறு என்ற வேறுபாட்டுணர்ச்சி மறைந்து நாமும் திருவாசகமும் ஐக்கியமாகிப் பாடும் போது, திருவாசகம் உவட்டாமல் இனிக்கிறது என்கிறார். வானிற் கலந்த மாணிக்கவாசகரே! உன் வாசகத்தை நான் கலந்து பாடும்போது கருப்பஞ்சாறு, தேன், பால், கனிச்சாறு ஆகிய இவை கலந்த கலவையின் இனிமை போல உவட்டாமல் இனிக்கிறது என்ற இராமலிங்கரின் பாட்டைப் படிக்கும் போது, திருவாசக இனிமையைப் போல இனிமை மிகுவதைக் காணலாம். மாணிக்கவாசக! உம் வாசகத்தைக் கேட்டால், கீழ்ப்பறவைச் சாதிகளும் அதை மேலும் மேலும் கேட்க வேட்டமுறும்; சிங்கம், புலி, கரடி ஆகிய பொல்லா விலங்கு களும் மெய்ஞ்ஞானம்பெற நாட்டமுறும் என்றால் மக்கட் பிறவி யெடுத்த நான் உன் ஞானத்தில் நாட்ட மடைவதில் என்ன வியப்புளது? என்கிறார். இதுகாறும் இராமலிங்க

அடிகள் திருவாசகம் என்னும் தேனை மாந்தி, அத்தமிழ் மறையின் அநுபவத்தை அநுபவிக்க அருள் செய்யும்படி வேண்டியதையும், எல்லாவற்றையும் துறந்த துறவிகளும் ஏமாக்க, மாணிக்கவாசகர் அன்புருவம் அருளுருவம் பெற்று முடிவில் இன்புருவம் பெற்றதைப் பற்றிக் கூறியதையும், தன் வாட்டந்தீர்க்க வருமாறு வேண்டியதையும், திருவாசக இன்பம் காமம்மிகு காதலன்றன் கலவிதனைக் கருதுகின்ற கற்புடையாள் அநுபவிக்கும் இன்பத்தைவிட இன்பம் பயப்பதாயுள்ளது என்று கூறியதையும். அது ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கிறது என்று கூறியதை யும், பறவைகளும் விலங்குகளுங்கூட திருவாசகத்துக்கு உருகுகின்றன என்று கூறியுள்ளதையும் பார்த்தோம்.

இனித் துறைமங்கலம் சிவப்பிரகாச அடிகளார் தம் நால்வர் நான்மணி மாலையுள் மாணிக்க வாசகரைப் பற்றிக் கூறியுள்ளதைப் பார்ப்போம்.

அடிகளார், வெண்பாக்களால் சம்பந்தரையும், கலித் துறையால் அப்பரையும், விருத்தப்பாக்களால் சுந்தரரையும் பாடி, மாணிக்கவாசகரை அகவற் பாக்களால் பாடுகிறார். 'வேதமோ? வாசகத் தேனோ?' என்ற வினாவை எழுப்பிக் காரணங்காட்டி வாசகத் தேனே சிறந்ததென்கிறார். புனிதன் மொழிந்த வாசகமே வாசகம்; அம்பலக் கூத்தனே வாச்சியம் என்கிறார். இறைவன் தம்மைத் தொண்டனாகக் கொண்டதை விவரிக்கிறார். மாணிக்கவாசக மழை பொழிந்த நீரால் தான் சிவமெனும் மென்முளை தோன்றி, வளர்ந்து கருணை மலர்ந்து, முத்தி மெய்ப்பயன்தரும் என்று கூறியுள்ளார். அம்பலக் கூத்தன் அருளால் பெற்ற அன்பினில் ஒரு சிறிது அருளல் வேண்டுமென்கிறார். திங்கள்வார் சடைத் தெய்வநாயகன் நிலையை நன்கு விளக்கிக் கூறுகிறார். இகழ்ச்சி அறியா என்பு அணிவோன் புகழ்ச்சி விருப்பன் போலும் என்கிறார். வாசகன் புகன்ற வாசகம் பொற்கலம். பூசுரர் ஓதும் வேதம் மட்கலம், வாசகம் ஓதுதலால் எய்தும் பயன் முத்தி; வேதம் ஓதுதலான் எய்தும் பயன் வெறும் அறமே என்கிறார். சிவனடியவனும் வாதவூரனை மனத்தால் கட்டவல்லாற்கு அவனே முத்தி தருவான் என்கிறார். முடிவாக அடிகளார்

பூவெனப்படுவது திருமகள் வாழும் செந்தாமரைப்பூவே; அது போலப் பா எனப்படுவது திருவாசகப் பாவே என்கிறார்.

ஆரண மொழியோ? வாசகத் தேனோ? யாதோ சிறந்தது?

ஆரண மொழி (வேதம்) உலக காரணனான கடவுள் உரைத்த மொழி அந்தக் கடவுள் முக்கட்கடவுள். முக்கட் கடவுள் தன் உடம்பில் பாதியைப் பார்வதிக்குப் பங்கிட்டுக் கொடுத்தவர். அத்தகையவன் அருளிய ஆரண மொழி சிறந்ததா? மலர் வாய்ப்பிறந்த வாசகத்தேன். மலரிற் பிறந்த தேன் அல்ல; மலர்போன்ற வாயிலிருந்து உண்டான வாசக மாகிய தேன். வாதவூர் அண்ணலாம் மாணிக்கவாசகர் தம் மலர் வாய்ப் பிறந்த வாசகத்தேன் சிறந்ததா? என்று வினவு கின்றார் அ கள். வினவுக்கு அடிகளே விடையும் கூறு கின்றார் வாசகத் தேன் சிறந்தது என்று. ஏன் வாசகத்தேன் சிறந்தது? என்பதற்குக் காரணமும் கூறுகிறார் வேதம் ஓதினால், இரு விழிகளிலிருந்து கண்ணீரைப் பெருக்கி, நெஞ்சுருகி நிற்பவரை எவரும் எங்கும் கண்டதில்லை. திருவாசகத்தை ஒருமுறை ஓதினாலும் கருங்கல் மனமும் கரையும்; மணற்கேணியிலிருந்து நீர் சுரப்பது போலக் கண் கள் நீரைச் சொரியும்; மயிர் சிலிர்க்கும்; மெய்ந்நடுங்கும் ஓதியவர் கடவுள் அன்பராவர். இந்நிலை எய்தாதவரை எங்கும் கண்டதில்லை. ஆதலின் வாசகத்தேனே சிறந்த தென்கிறா. ஓதுபவருக்குப் பக்தி உணர்ச்சியை ஊட்டாத ஆரணமொழியைவிட (வேதத்தைவிட) ஓதுபவருக்கு உள்ள முருகும்படி கண்ணீரைச் சொரியும்படி மயிர் சிலிர்க்கும்படி பக்தி உணர்ச்சியை ஊட்டும் திருவாசகமே சிறந்த தென்கிறார். திருவாசகம் உள்ளத்திற்கும் சுவையூட்டுவது; உடலுக்கும் சுவையூட்டுவது; அதனால் தான் திருவாசகத்தைத் தேன் என்றார். தேன் நாக்கில் பட்டு உள்ளத்துக்கு இனிமைச் சுவையை அளிப்பது மட்டுமல்ல; அதிலுள்ள நல்ல சத்து உடலுக்கும் வலுவூட்டுவது. ஆதலால் திருவாசகத் தேனே சிறந்தது என்று நிறுவுவது பொருத்தமே ஆகும்.

வாசகமே வாசகம்; வாச்சியம் மாதொருபாகனும் சிவனே

வாசகம் புனிதன் மொழிந்த வாசகம். திருப்பெருந்துறை என்னும் தலத்துள் புகுந்து, சிவமாகிய பேரின்ப வெள்ளத்தில் மூழ்கிய புனிதனும் மாணிக்கவாசகன் மொழிந்த திருவாசகமே வாசகம். அந்த வாசகத்தின் வாச்சியம் (பொருள்) இமவான் மகளை இடப்பாகத்திற் கொண்ட அம்பலக் கூத்தனே என்கிறார் சிவப்பிரகாசர்,

நின்னைத் தொண்டன் என்னக் கொண்டனன்

அடிகளார் இவ்விடத்தில் மாணிக்கவாசகரை 'வாதவூரன்ப!' என்று விளிக்கிறார். அவர் பிறப்பிடமாகிய வாதவூரின் வளத்தை வருணிக்கிறார். நிலவளம் நீர்வளம் மிகுந்த இடத்தில்தான் தாமரையும் சங்கும் மிகுந்திருக்கும். சங்குகளிற் சிறந்த வலம்புரிச் சங்கங்கள் தாமரை மலரின் மேல் கிடக்கின்றன. திருமால் கையிலுள்ள பாஞ்சசந்நியம் என்ற சங்கு வெட்கப்படும்படி வாதவூரில் தாமரை மலர்களில் வலம்புரிச் சங்குகள் கிடக்கின்றனவாம் மாணிக்கவாசகர் அவதரித்த திருத்தலமாகிய வாதவூரில் தோன்றிய வலம்புரிச் சங்கைக் கண்டு பஞ்சசநன் என்ற அசுரன் எலும்புருவாக உள்ள திருமாலின் சங்கு நாணுகின்றதாம். திருமாலின் கையிலுள்ள சங்கிற்குச் சுதந்தரமாக இயங்கும் தன்மை இல்லை. ஆனால் வாதவூர்த் தாமரையிற் கிடக்கும் வலம்புரிச் சங்கிற்குச் சுதந்தரமாக இயங்கும் தன்மை உண்டு. ஆதலின் தற்சுதந்தரம் அற்ற திருமால் கரத்திலுள்ள பாஞ்சசநநியம். அவர் உமையொரு பாகரை வழிபட வரும்போதெல்லாம், வாதவூர் வலம்புரியைக் கண்டு நாணுகின்றதாம். திருமால் இறைவனை மலரிட்டு அருச்சனை செய்தபோது, மலரொன்று குறைய, தன் கண்ணையே பெயர்த்து மலராக இட்டு, அருச்சனை செய்து வழிபாட்டை நிறைவேற்றினாராம். இறைவன், அவர் அன்பிற்கு இரங்கிச் சக்கரப் படையை வழங்கினன். அத்தகைய இறைவனுக்குத் தலைமுடியை விளக்கில் திரியாக இட்டு எரியச் செய்தார் கணம்புல்லர்; தன் மனைவியையே கொடுத்தார் இயற்பகையார்; வயலில் விதைத்த நெல்முளையை வாரிக்கொண்டு வந்து அமுதாக்கிப் படைத்

தார் இளையான்குடி மாறனார்; கோவணத்துக்கு ஈடாகத் தன்னையேகொடுத்தார் அமர்நீதியார்; அருமையாகக் கிடைத்த பொன்மீனை இறைவனுக்கே உரியதென்று கடலில் விட்டார் அதிபத்தர்; அரிவாளால் தன் ஊட்டியை அறுத்தார் அரிவாட்டாயர்; அடியவர் துவைக்கக் கொடுத்த துணியைப் பொழுது போகுமுன் கொடுக்க முடியவில்லையே என்று, துணி துவைக்கும் கல்லிலே தன் தலையை மோதினார் திருக் குறிப்புத் தொண்டர்; அடியவர் பணியில் தவறு செய்த தன் மனைவியின் மணிக்கரம் வெட்டினார் கலிக்கம்பர்; சிவபெருமா னின் உணவுக்காகத் தன் மகனைத் தானே அறுத்துக் கறி சமைத்தார் சிறுத்தொண்டர்; இறைவனுக்குக் குற்றம் செய்த சுற்றத்தினர் அனைவரையும் குத்திக் கொன்றார் கோட்புலியார்; இறைவனுக்குரிய மலரை எடுத்த குற்றத்துக்காகச் செல்வ மகளின் மூக்கை அறுத்தார் செருத்துணையார்; தான் மிகப் பற்று வைத்துள்ள நீலகண்டத்தின் மேல் தன்மனைவி ஆணை யிட்டதனால், பெண் ஆசையை இளமையில் அறவே துறந்தார் திரு நீலகண்டர்; இவ்வாறு செயற்கருஞ் செயல்களைச் செய்து சிவபெருமானுக்குத் தொண்டரானவர் பலர்; ஆனால் அந்த இறைவனே, நீ பாடுந்தொண்டை மேற்கொள்வதற்காக, மதுரை மாநகரில் நரியைப் பரியாக்கினார்; பரியை நரியாக் கினார்; பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி பட்டு நின்னைத் தொண்டனாகக் கொண்டார்'' என்று அடிகளார், இறைவன் மாணிக்க வாசகரை ஆட்கொண்ட அருமையை வியந்து கூறு கிறார்.

மாணிக்க வாசக மழை பொழிந்த வாசகநீர்

''மாணிக்க வாசகராகிய மேகம் திருப்பெருந்துறையிற் புகுந்து, கங்கை நதியைத் தலையிற் கொண்ட கருணைக் கடலை முகந்து, மனித உயிர் மகிழும்படி பொழிந்த திருவாசகமாகிய பெரிய வெள்ளமானது, அதை ஓதுபவரின் மனமாகிய ஏரியில் நிரம்புகிறது நிரம்பி, வாயாகிய மதகின் வழியே வெளிப் பட்டு அதைக் கேட்பவர் காதுகளாகிய மடைகளில் தவறாமல் சென்று, அவர்தம் நெஞ்சமாம் நிலத்திற் பாய்கிறது அங்கே விதைக்கப்பட்டுள்ள அன்பாகிய விதையில் சிவம் என்னும் சிறுமுளை முளைக்கிறது. அந்த முளை வளர்ந்து, கருணை மலர்ந்து முத்தியாகிய உண்மைப் பயனை உதவுகிறது'

என்கிறார். மாணிக்க வாசகராகிய மேகம் பொழிதலால் முத்திப்பயன் உண்டாதலை அடிகளார் உருவகித்து வருணித்துள்ள அழகை ஓதி உணர்ந்து இன்புற வேண்டும்.

ஒரு சிறிது அடியனேற்கும் அருளல் வேண்டும்

சிவப்பிரகாச அடிகளார், "சிவனே! அலந்தேன்; அந்தோ! இறையே முறையோ முறையோ? என்று மாணிக்க வாசகர் அழுது அழுது அம்பலக் கூத்தன் அருளால் பெற்ற அன்பினில் அடியனேற்கும் ஒரு சிறிது அருளல் வேண்டும் என்ற அளவில் நிறுத்தவில்லை. "முழுவதையும் நீயே எடுத்துக் கொள்ளுதல் உன் நிறைந்த கருணைக்குப் பொருத்த மாகாது" என்று கூறுகிறார். இவ்விடத்து அடிகளார் மாணிக்கவாசகரை அழைத்த அழைப்பில் அரிய நயத்தை அமைத்திருக்கிறார். இறைவன் இயல்பாக எருதேறி வருபவன்; 'அவனைக் குதிரை மீதேறி வரச்செய்தவரே!' (விரைந்து செல்வதற்காக எருதை விட்டுக் குதிரையேறி வந்தாராம்) என்று விளிக்கிறார். மாணிக்கவாசகருக்கு அருள் புரிய மெதுவான நடையை உடைய எருதை விட்டு, வேகமான நடையை உடைய குதிரைமேலேறி வந்தாராம். அவரை அவ்வாறு வரச்செய்தது அவரது அன்பு. இறைவன் மணிவாசகரிடம் வலியவந்தார்; ஆட்கொண்டார்; பெருந்துறையில் குருந்த மரத்தடியில் வேத உபநிடதப் பொருளாம் சைவ சித்தாந்த உண்மைகள் முழுவதையும் உபதேசித்தார்; மாணிக்க வாசகர்தம் தலைமேல் தன் திருவடியை வைத்துத் தீட்சை அளித்தார்; இத்தகைய சிறப்புக்கள் பலவற்றையும் சொல்லி அடிகளார் மாணிக்கவாசகரை விளிக்கிறார்.

புகழ்ச்சி விருப்பன்

மாணிக்க வாசகர் தம் பாடல்களைத் தாமே சொல்ல, அம்பலக் கூத்தன் அவற்றை ஏட்டில் எழுதினான், தன்னைப் பற்றி அவர் பாடிய பாடல்களைத்தானே எழுதினான், ஆதலால் அவன் புகழ்ச்சி விருப்பன்போலும்' என்கிறார். தன் குறைகளையும் உணராது எழுதினான் தெய்வநாயகன்; "அவன் ஒருகலையேனும் உணரான்; அவன் கைகளோ முறிபடுங்கைகள்; கண்களோ ஒன்று பகலில் மட்டும் காண்பது; மற்றொன்று

இரவில் மட்டும் காண்பது; மற்ருென்று திறந்த மாத்திரத்தில் எதிர்ப்பட்ட பொருளை எரித்தழிப்பது; கலையறிவின்மை, பகற் பார்வை, இரவுப் பார்வை மட்டும் உடையகண்கள், அழிக்கும் கண், இத்தகைய குறைகளிருந்தும் அவனைப் புகழ்ந்து பாடிய பழுதற்ற பாடல்களை எழுதினுன். அவன் தன்னைப் பிறர் பழிப்பதைப்பற்றியே கவலைப்படாமல் எலும்பு மாலைகளை அணிந்திருப்பவன். ஆனுல் தன்னைப் பிறர் புகழும் புகழ்ச்சி யைக் கேட்பதில் மிக விருப்பமுடையவன் போலும்'' என்று கூறினுர். இவ்விடத்தில் அடிகளார் மணிவாசகரை, "நலம் மலிவாதவூர் நல்லிசைப்புலவ! மனம் நின்று உருக்கும் மதுர வாசக! ஐம்புலன்களையும் வென்றடக்கிய ஆண்மை மிக்கவீர!'' என்று பலவாறு சிறப்பித்து விளிக்கிருர்.

செஞ்சொற் பொருளின் தெளிவு

சிவப்பிரகாசர், 'செஞ்சொற் பொருளின் தேற்று (தெளிவு) அறிந்தேனே'' எனகிருர் அவர் கூறும் செஞ் சொல் யாது? அதள் பொருள்யாது? அதன் தெளிவை இவர் அறிந்தது எப்படி? என்பவற்றைப் பார்ப்போம்.

"நன்றறி வாரிற் கயவர் திருஉடையர்
நெஞ்சத் தவல மிலர்.''

என்பதே அவர் கூறும் செஞ்சொல் ஆகும். திருக்குறளை அடிகளார் செஞ்சொல் எனக் குறிப்பிட்டது சிந்திக்கத் தக்கது இப்பிறப்பு, மறுபிறப்பு, வீடு ஆகிய இவற்றுக் குரிய நன்மை தரும் பொருள்கள் புகழ், அறம், ஞானங்கள் ஆகிய இவற்றை அறிந்தவர் அவைகளை நல்ல முறைகளில் செய்து கொண்டிருந்தும், இன்னும் மிகுதியாகச் செய்ய வில்லையே என்றும், செய்கின்ற இவற்றிற்கு இடையூறு ஏற்படுமோ என்றும், இந்த நன்மைக்கு மாறுபட்ட பழிபாவம் அறியாமை ஆகிய இவை தம்மிடம் ஏற்பட்டு விடுமோ என்றும் கவலைப்படுவர். ஆனுல் கயவர்களோ அவற்றை அறியவும் இல்லை; செய்யவும் இல்லை; அவற்றைப் பற்றிக் கவலைப்படவுமில்லை. ஆதலால், அவரை 'நன்று அறிவாரில் கயவர் திருவுடையர்' என்று புகழ்வது போலப் பழித்துக் கூறுகிருர். மாணிக்கவாசகரே! இறைவனின் பேரருளைப்

பெற்றும் பெறுதார் போல வருந்தி மனமுருகி நிற்கிறீர். நானே அவன் அருளைப் பெருதும் பெற்றவனைப் போல மகிழ்ச்சி மிகுந்து கவலையின்றி உள்ளேன். இதனல் வள்ளுவரின் செஞ்சொற் பொருளைத் தெளிவாக உணர்ந்தேன் என்கிருர். இங்கு மாணிக்கவாசகர் பிறந்த ஊராகிய வாதவூரை ''அன்னம் ஆடும் அகன் துறைப் பொய்கை வாதவூர்'' என்று சிறப்பிக்கிருர்.

பொற்கலமும் மட்கலமும்

''திருப்பெருந்துறையில் குருந்த மரத்தின் நிழலில் ஒப்பில்லாத சிவானந்தத் தேனைத் தெவிட்டும்படி குடித்த மாணிக்கவாசகரே! நீர் சொன்ன மதுரவாசகம் பொற்கலம் போன்றது. ஏனெனில், பொன்னுல் செய்யப்பட்ட பாத்திரத்தை எவர் தொட்டாலும் தூய்மை கெடுவதில்லை. அவ்வாறே உன் வாசகத்தை இவ்வுலகிற் பிறத்த எச்சாதியினரும் ஓதலாம். வேதம் மட்கலம் போன்றது. ஏனெனில் மண்பாத்திரத்தைக் கீழ்ச்சாதியினர் தொடக்கூடாது. (தொட்டால் அது தீட்டுப்பட்டு விட்டதாகக் கருதுவர். அதன் தூய்மை கெட்டு விட்டதாகக் கருதுவர். அதனுல் அதை உடனே உடைத்து விடுவர்) அவ்வாறே வேதங்களைப் பிராமணர் தவிர மற்ற சாதியினர் ஓதக்கூடாது. வேதங்களை ஓதுவதால் பெறும் பயன் வெறும் அறமே. (சுவர்க்கம் முதலிய பதவிகளைப் பெறுவது) திருவாசகத்தை ஓதுவதால் பெறும் பயன் முத்தி ஆகும்'' என்று கூறி வேதத்தினும் திருவாசகமே சிறந்தது என்பதை நிறுவுகிருர்.

பாவும் பூவும்

பாதம் போற்றும் வாதவூர் அன்ப! என விளிக்கிருர். எவருடைய பாதம் போற்றும் வாதவூரன்பன்? சிவந்த நீண்ட சடையினை உடைய தெய்வ சிகாமணியின் பாதம் போற்றும் வாதவூரன்பன். 'பூ என்று சொன்னுல் அது திருமகள் வாழும் செந்தாமரைப் பூவை மட்டுமே எவ்வாறு குறிக்குமோ, அவ்வாறே, வாதவூரன்ப! பா என்று சிறப்பித்துச் சொல்லப் படுவது உன்பாட்டே' என்று முடிக்கிருர்.

இதுகாறும் இராமலிங்க அடிகளும் சிவப்பிரகாச அடிகளும் பாடிய பாடல்களின் வாயிலாக மாணிக்கவாசகப் பெருமான் சிறப்பையும், அவர் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகத்தின் சிறப்பையும் அறிந்தோம். அறிந்த நாம் திருவாசகம் வாழ்வு; திருவாசகம் செல்வம்; முத்தி அடைவதற்குத் திருவாசகமே துணை; திருவாசகமே சிவமணம் சமழ்வது; என்பவற்றை மனத்திற்பதித்து, இடைவிடாது திருவாசகத்தை ஓதி, திருவாசகத்திற் கலந்து, பிறவிப் பயனாகிய சிவாநந்த வாரிதியில் மூழ்கித்திளைப்போமாக.

விருந்தோம்பி வான்புகுந்த மாறனார்

(மா. ப. தியாகராஜன் B. A.)

வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்

என்பது பொய்யாமொழிப் புலவராம் வள்ளுவர் வாக்கு. வேளாண்மை குறைவதற்குக் காரணம், புலம் படைத்தவர்கள் விருந்தோம்புதலை மேற்கொள்ளாமையே யாகும். வேளாண்மை செய்வோர் விருந்தோம்பி வாழ்வதால் அவர்களுடைய நிலங்கள் நல்ல பலனைக் கொடுக்கும். தொழிலாளிகளின் ஊதியம் அதிகப்பட்டமையாலும், அரசாங்கக் கட்டு திட்டங்களாலும் சாகுபடி செய்வோர் பாதிக்கப்பட்டு விருந்தினரை உபசரிக்க அஞ்சுகின்றனர். நகரங்களில் திண்ணையில்லா வீடுகளையே காணலாம். முன்பக்கம் கடைகளும் பின்பக்கம் குடியிருக்கும் இடமாகவும் நகரத்தில் இல்லங்கள் அமைந்துள்ளதால் பிச்சை கேட்க வருபவரும் இல்லங்களில் சென்று கேட்க அஞ்சுகின்றனர். செல்வந்தர்கள் வீட்டில் சில இடங்களில் யாரும் வீட்டிற்குள் வராமலிருக்க "நாய்கள் ஜாக்கிரதை" என்ற அறிவிப்பு வாயிற்படியில் எழுதி வைத்திருப்பதைக் காணலாம்.

"விருந்தோம்பல்" இல்லற தருமம் என்றுணராது அதைக் கைவிட்டு வாழ்தலால் வேளாண்மை குறைந்து பஞ்சம் ஏற்படுகிறது. தம்முடைய நலனையொட்டியும் உலக நன்மையைக் கருதியும் விருந்தோம்பலை ஒரு முக்கிய கடமை யாகக் கொள்ளல் வேண்டும். அரசாங்கம் வாரத்திற்கென அளந்து கொடுக்கும் அரிசி நமக்கே போதவில்லையே! விருந்தினருக்கு எப்படி அன்னமிடுவது? என்ற கேள்விக்கு அருணகிரிநாதர். "நொய்யிற் பிளவளவேனும் பகிர்ந்துண்கள்" என்று கூறுகிறார். நொய் கஞ்சி சாப்பிடுவதானாலும் அதில் ஒரு பங்கு பிறர்க்கெனத் தந்து சாப்பிட வேண்டுமென்று கூறுகிறார். சிவபெருமானுடைய அருளைப் பெறுவதற்கு வேறு எந்தவித சாதனையும் வேண்டுவதில்லை யென்ற உண்மையைப் பின்வரும் பாடலொன்றில் அருண கிரி நாதர் விளக்கிக் காட்டியுளளார்.

தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியை
தானமென்றிடுங்கோள் எழுபாரு முய்யக் கொடுங்
கோபச்சூருடன் குன்றம் திறக்க துளக்க வைவேல்
விடுங்கோன் அருள்வந்துதாமே உமக்கு வெளிப்படுமே.

மற்றும் கந்தர் அனுபூதியில் அவர் கூறுவதாவது

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே.

ஒளிக்காமல் பிறருக்கு உள்ளதை இட்டுண்ண வேண்டுமென்று மனத்திற்குபதேசம் செய்கின்றார். அப்படிப்பட்ட மனம் அல்லாதவர் கெடுவர் என்றும் கூறுகிறார்.

சிவபெருமானால் அவ்வாறு தாமே வந்து ஆட்கொள்ளப்பட்ட நாயனார் இளையான்குடி மாறனார் என்பவர் ஆவர். அவர் சிவபெருமானுடைய அடியவர்களுக்கு அமுதுபடைக்கும் மனப்பான்மை யுடையவர். வேளாளர் குலத்தவர். விருந்தோம்பி வாழ்ந்துவந்த வேளாளர் ஆதலால் அவரு

டைய சில புலன்கள் ஏராளமாக அவருக்குப் பயனளித்து வந்தன. அவருடைய நிலங்களில் வித்துமிடல் வேண்டுங் கொல்லோ !

அவர் எப்படி அடியவர்களை விருந்தினராக வரவேற்று உபசரித்தாரென்பதைச் சேக்கிழார் பெருமான் பின்வரும் பாடல்களில் விளக்கிக் கூறுகின்றார்.

ஆரம் என்பு புனைந்த ஐயர் தம் அன்பர் என்பதோர்
தன்மையால்
நேரவந்தவர் யாவராயினும் நித்தமாகிய பத்திமுன்
கூரவந்தெதிர்கொண்டு கைகள் குவித்து நின்று
செவிப்புலத்து,
ஈரம் மென்மதுரப்பதம் பரிவெய்த முன்னுரைசெய்தபின்.—

"கொண்டு வந்து மனைப்புகுந்து குலவு பாதம் விளக்கியே
மண்டு காதலின் ஆதனத்திடை வைத்தருச்சனை செய்தபின்
உண்டி நாலுவிதத்திலாறு சுவைத் திறத்தினில் ஒப்பிலா
அண்டர் நாயகர் தொண்டரிச்சையின் அமுது செய்ய
அளித்துளார்"

மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து

என்றதனால் விருந்தினரை முகனமர்ந்து உபசரித்தல் வேண்டும். இப்போது நாமுள்ள நிலை, அவர்களுக்கேற்படப்போகும் நிலையை விட மோசமானதன்று. ஏதோ பங்கீட்டு முறையில் அரிசி கிடைத்துக்கொண்டிருக்கிறது. அவருக்கோ நாளடைவில் செல்வம் குன்றக் கூத்தபிரான் நினைத்தாராம். சேக்கிழார் பெருமான் அவர்களுக்கு வறுமை வர வேண்டுமென்று "உங்கினர் தில்லை மன்னினர்." என்று கூறுகிறார். என்ன கொடுமை? அன்றாடம் சாப்பிடவே உணவின்றி வருந்தினாராம். "மிடியென்னொருபாவி வெளிப்படினே—வடிவும தனமும் மனமும் குணமும் குடி போகியவா,. யென்று வறுமை வந்திடில் வடிவு, தனம், நல்ல

மனம் நல்ல குணம் நற்குடி இவைபோய்விடுமென்று அருண கிரிநாதர் கூறி அஞ்சுகிறார். அப்படிப்பட்ட வறுமை வந்துற்ற நாளிலும் அவர்களுடைய கொடைக் குணம் மாறவில்லையாம். இது அடியாரிலக்கணமென்று திருஞான சம்பந்தர் ஒரு பாடலில் விளக்குகிறார்.

"விண்பொய் அதனால் மழைவிழா தொழியினும்
விளைவுதான் மிகவுடை
மண்பொய் அதனால் வளமிலா தொழியினும் தமது
வண்மைவழுவார்
உண்பகர வாருலகிலூழிபல தோறு நிலையானபதிதான்
சண்பைநகர் ஈசனடி தாழுமடியார் தமது தன்மையதுவே"

செல்வம் குன்றி பல தினங்களில் பட்டினி கிடக்கும் நிலையும் ஏற்பட்டு விட்டது அவர்களுக்கு.

அந்த நிலையில் ஒருநாள் நள்ளிரவில் வெள்ளமோட மழை பொழிந்து கொண்டிருக்க சிவபெருமான் நனைந்து கொண்டு அவருடைய இல்லத்தில் அடியவர் கோலத்துடன் பசி அதிகமாக இருப்பதாகப் பாவனை செய்து கொண்டு எழுந்தருளினார். உடனே இளையான்குடிமாற நாயனார் அவரை உள்ளே கொண்டுவந்து அவர் மேனியிலிருந்த ஈரத்தைப் போக்கி அமரும்படி செய்துவிட்டு அவருடைய பசியைப் போக்குவதெப்படி யென்று தன்னுடைய பத்தினி யிடம் ஆலோசிக்க, அவள் கூறிய ஒரு உபாயத்தை உவகை யுடன் ஏற்று அந்த நள்ளிருளில் காலால் தடவிக்கொண்டு தம்முடைய வயலில் அன்று விதைத்திருந்த நெற்களைக் கையினால் தடவி வாரிக்கொண்டு வந்து மனைவியிடம் கொடுத்தார். அம்மாதும் அதை வாங்கிச் சேற்றினை அலம் பிப் பக்குவப்படுத்திச் சமைக்க அடுப்புமூட்டக் கட்டை வேண் டுமே யென்று கூற மாறனாரும் கூரையிலிருந்த மூங்கில்களை அறுத்துக் கொண்டு வந்து தந்தனர். அம்மையாரும் அடுப்பை மூட்டி அலம்பிய நெற்களை வறுத்துப் பதம்பண்ணி அன்னமாக்கியபின் கறிசமைக்க எண்ணித் தன் கணவரிடம்

கூற, அவரும் அன்று முளைத்து வந்திருந்த இளைகளைப் பாசத்தனை பறிப்பார்போல்பறித்து வந்தாரெனச் சேக்கிழார் கூறுகிறார். அவற்றைத் தன்னுடைய கைத்திறத்தினால் பலவித வகையாகக் கறி சமைத்துவைத்தபின் காத்துக்கொண்டிருக்கும் அடியவரைச் சாப்பிட அழைக்கச் சென்றார் மாறனர். அப்போது அடியவர்கோலத்திலிருந்த சிவபெருமான் ஒளிப்பிழம்பாய்க் காட்சியளித்து வானத்தில் அம்மை அப்பராகத் தருமவிடைமேல் தோன்றினர்.

"அன்பனே! அன்பர் பூசை அளித்த நீ அணங்கினேடும்
என் பெரும் உலகம் எய்தி இருநிதிக் கிழவன் தானே
முன் பெருநிதியம் ஏந்திமொழி வழிஏவல் கேட்ப
இன்பமார்ந்திருக்க" என்றே அருள் செய்தான்
எவர்க்கும் மிக்கான்"

திருமயிலையில் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் அங்கம் பூம்பாவையை உயிர்ப்பித்துக் கொடுக்கப் பாடிய திருப்பதிகத்தின் விளக்கத்தைச் சேக்கிழார் பெருமான் பின்வரும் பாடலில் கூறுகிறார்.

"மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடு
மண்ணவார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினல் அவர் நல்விழாப்பொலிவு கண்டார்தல்
உண்மையாமெனில் உலகர்முன் வருக என
உரைப்பார்"

எனவே அங்கம்பூம்பாவை குடத்தினின்றும் வெளிப்பட்டு "மனிதப் பிறவி எடுத்ததின் பயன் அடியவர்களுக்கு அமுது செய்வித்து அவர்களுடைய விழாக்களைக் கண்டு அவ்வழி சிவபெருமான் திருவடி அடைதலேயாகும்" என்பதை உறுதிப்படுத்திக் காட்டினர்.

தம்பதிகளிருவரும் தம் பதிகளைவிட்டுத் தனம் தேடச் சென்றுவிடுவாராயின் இல்லத்தில் வரும் விருந்தினர்களை உபசரிப்பார் யாரோ? விருந்தினரை ஓம்பும் மானிட லக்ஷியத்தை விட்டுப் பொருள் தேடும் இச்சையில் ஆண்பெண் இருவரும் முனைவது தகுதியல்ல என்பதையும் நினைவுபடுத்திக்கொள்ளவேண்டும்.

சமரசமும் இறைவன் நாமங்களும்

கொ. நீ. சி.

திரு சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் 12-4-69 வெளிவந்த சுயராஜ்யா வார இதழில் பின்வரும் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்:—

"ஒரே கடவுளைப் பலவிதப் பெயர்கள் சூட்டி வழிபடுவோர்களிடையே இருக்கும் வேற்றுமை உணர்ச்சியை அகற்றுவதுதான் 23ஆம் போப் ஜான் அவர்களுடைய முக்கிய நோக்கம். மகாத்மா காந்தி அவர்களுடைய நோக்கமும் அதுதான். அன்னிபெசண்ட் அம்மையார் போன்ற பல பெருந் தலைவர்களின் நோக்கமும் அதுவே. எல்லாச் சமயத்தார்களும் வணங்கும் கடவுள் ஒருவரே என்னும் உண்மை, அறிவு பூர்வமாகத் தெரிந்து கொள்ளவேண்டிய ஒன்று. ஆனால் இவ்வுண்மை, கடவுள் வழிபாட்டிற்கு அடிப்படையான உணர்ச்சியைக் குறைக்கும் வகையில் பயன் படக் கூடாது.

மகாத்மா காந்தியின் மார்பில் கோட்சி என்பவர் மூன்று குண்டுகளைப் பாய்ச்சியபோது மகாத்மா 'ஹரே ராம்' என்ற நாமத்தைத் தான் உச்சரித்து ஆவி துறந்தார். நம் வழிபாட்டின்போது ஒவ்வொரு நாமமும் அதற்கேற்ற உணர்ச்சியை எழுப்புகிறது. இந்நாமங்கள் மிகவும் முக்கியமானவை. எல்லாச் சமயத்தாரும் ஒரே கடவுளை வழிபடுகின்றார்கள், அவர்களிடையே ஒற்றுமையை வளர்க்கவேண்டும் என்ற காரணங்களைக் காட்டி மக்களுக்கு உணர்ச்சி யூட்டும் இறைவன் நாமங்களின் முக்கியத்துவத்தைக் குறைக்கக் கூடாது. போப் ஜான் அவர்களுடைய உள்ளமும் உயிரும் ஏசுநாதரின் பெயரைச் சொல்லும்போதுதான் கிளர்ச்சியுறும். ஆனால், 'நாராயணா' 'கோவிந்தா' 'அல்லா' என்றபோது அதே உணர்ச்சியை அவருக்கு அந் நாமங்கள் தரா. ஆகையால் ஒவ்வொரு சமயத்தாரும் தாம்

வணங்கும் கடவுளுக்கென அமைந்த பெயரும் உருவமும் தாங்கள் தொன்று தொட்டுப் பழகிய வழிபாட்டு முறையும் தியானமும் பிறவும் புறக்கணிக்கப்பாலனவல்ல. ஒரு இஸ்லாமியருக்கு 'அல்லா' என்ற பெயர் அளிக்கும் மன நிறைவை வேறு பெயர் அளிக்காது. அது கொடுக்கும் சமய உணர்ச்சியையும் ஆர்வத்தையும் வேறுபெயர் கொடுக்க முடியாது. ஆதி சங்காருக்குக் கோவிந்தா என்னும் நாமம் அளித்த ஆற்றலை வேறு நாமங்கள் அளிக்கவில்லை".

இப் பொன்மொழிகள் பின்வரும் கருத்துகளைத் தோற்றுவிக்கின்றன:—

1. நிலத்தில் வரம்பு கட்டி நீர்ப்பாய்ச்சினுல்தான் நீர் தங்கும். இல்லையேல் நீர் மிகப் பரவிப் பயனற்றுப் போகும். அதுபோன்று ஆன்மீக வளர்ச்சிக்கு ஒரே தெய்வ வழிபாடு மிக அவசியம்.

2. நமது சமயகுரவர்களும் சந்தான குரவர்களும் உணர்ச்சியோடு கூடிய ஒரு தெய்வ வழிபாட்டிற்கு ஊறு நேரா வண்ணம் சமரசப் போக்கையும் தழுவி வந்தார்கள். உதாரணமாக, மணிவாசகர்

"தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்ருர்

அருள்நந்திசிவம்:—

'யாதொரு தெய்வம் கொண்டீர்
அத்தெய்வமாகியாங்கே
மாதொரு பாகனுர்தாம் வருவர்" என்ருர்

நாம் வணங்கும் சிவபெருமானே மற்ற சமயத்தவர் வணங்கும் கடவுளும் ஆவார் என்றதனுல் சமரசப போக்கும் சிவநாமத்தின் தனிப்பெருமையும் காப்பாற்றப்படுகின்றன.

3. நம் சமயகுரவர்கள் சிவநாமத்தின் பெருமையை ஆங்காங்கு வலியுறுத்தி வந்தனர்.

உதாரணம்:—

"சிவன் எனும் நாமம் தனக்கேயுடைய
செம்மேனி எம்மான்"
நாவுக்கரசர்

"நானேயோ தவம் செய்தேன்?" "சிவாய நம"
எனப் பெற்றேன்?"
மணிவாசகர்

4. உள்ளமும் உணர்ச்சியும் கலவாமல் சிவநாமத்தை உச்சரிப்பதில் பயனில்லை என்பதை நம்குரவர்கள் வற்புறுத்தியுள்ளனர்.

உதாரணம்:—

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக்கு உய்ப்பது;
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது;
நாதன் நாமம் நமச்சிவாயவே"

கணவனைப் பிரிந்த கற்புடை மங்கை தன் கணவன் பெயரைக் கேட்டபொழுது என்ன உணர்ச்சியையும் பரபரப்பையும் அடைவாளோ அதே நிலையை ஒரு பக்தன் இறைவன் பெயரைக் கேட்ட அளவில் அடைவான்.

பின்வரும் திருவாசக வரிகளை ஓர்க:—

"மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய
வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே, விம்மிவிம்மி
மெய்ம்மறந்து
போதாரமளியின் மேல் நின்றும் புரண்டுஇங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாள் என்னே! என்னே!!
ஈதே எம்தோழி பரிசு? ஏல்ஓர் எம்பாவாய்!"
"தென்னா" என்னா முன்னம், தீசேர் மெழுகு
ஒப்பாய்"

சமாஜத் தேர்வுகளின் பாடத்திட்டம்

இளஞ் சைவப் புலவர்

1. இலக்கணம்: நன்னூல் காண்டிகை (ஆறுமுக நாவலர்) (6–50) யாப்பருங்கலக்காரிகை (3–50 கழகம்) தண்டியலங்காரம் (பொதுவியல், பொருளணியியல் மட்டும்–5-00)-கழகம்)

2. இலக்கியம்: திருமுருகாற்றுப்படை (0–75 நாவலர்) கந்தர் கலிவெண்பா (1-50-கழகம்) கந்தர் அநுபூதி (0–60-நாவலர்) திருக்குறள் அறத்துப்பால் (6–50-நாவலர்) பரிமேலழகர் உரையுடன். சுந்தரர் தேவாரம் முழுவதும் (1–30-நாவலர்)

3. சாத்திரம்: திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் (1–50-கழகம்) உண்மை விளக்கம் (2–75-கழகம்) திருவருட்பயன் (0–30-கழகம்) கொடிக்கவி, வினாவெண்பா (கழகம்)

4. உரைநடை: சைவத்தின் சமரசம் (திரு. வி.க.) வாகீசர் அல்லது மெய்யுணர்தல். (சிவக்கவிமணி-1-50 கழகம்) தாயுமானவர் வரலாறும் ஆராய்ச்சியும் (கா. சு. பிள்ளை-2-50 கழகம்) பெரிய புராண வசனம் (ஆறுமுக நாவலர்–3-00) திருவிளையாடற் புராண வசனம் (ஆறுமுக நாவலர்-3-50)

சைவப் புலவர்

1. இலக்கணம்: தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (நச்சினார்க்கினியம்–நாவலர் (–00) சொல்லதிகாரம் (சேனாவரையம்–நாவலர் 3–50) பொருளதிகாரம் (இளம்பூரணம்–நாவலர் 9–50) தருக்க சங்கிரகம் (சிவஞான முனிவர்-நாவலர் 0-60)

2. இலக்கியம்: பெரிய புராணம் (திருநாவுக்கரசர் புராணம் முழுதும்-3–50 காசிமடம், திருப்பனந்தாள்.) சம்பந்தர் தேவாரம் முழுவதும் (அம்பை நூலகம்) திருவாசகம் முழுவதும் (சமாஜம் 1–00) ஒன்பதாம் திருமுறை முழுவதும் (சமாஜம் 1-00)

3. சாத்திரம் : சிவஞானபோதச் சிற்றுரை (நாவலர் 2-75) சிவஞான சித்தியார் சுபக்கம் (சிவஞான முனிவர் உரை-நாவலர்-6-00) சிவப்பிரகாசம் (நாவலர்-2-00) சங்கற்ப நிராகரணம் (கழகம்)

4. உரைநடை : சைவ சித்தாந்த ஞான போதம் (மறைமலையடிகள்-கழகம்-6-20) சிவஞான சித்தியார் ஆராய்ச்சி (க. சிவகுருநாத பிள்ளை-கழகம் 1-75) திருக்குறளின் உட்கிடை சைவ சித்தாந்தமே (க. வச்சிரவேல் முதலியார், 1-75 அம்பை நூலகம்) பெரிய புராண சூசனம் நாவலர் 0-75)

சமாஜத் தேர்வு எழுதுவோர் கவனிக்க

தேர்வு எழுத விரும்புவோர் பாடத்திட்டத்திற் குறித்துள்ள நூல்களை நன்கினிது படித்துப் பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும். சைவப் புலவர் தேர்தலில் முதல் வகுப்பில் முதன்மையாகத் தேர்ச்சி பெறும் இளைஞர்க்கு அதற்கென அன்பரொருவர் வழங்கிய மூலப் பொருளினின்று வரும் வருவாயைக் கொண்டு பரிசு வழங்கப்பெறும். இளஞ் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் மூன்றும் சைவப் புலவர் தேர்வுக்கு ரூபாய் நான்கும் பதிவுக் கட்டணம் ஆகும். விண்ணப்பம் அனுப்பும் இறுதி நாள் 30—9—69. தேர்வு நவம்பர் மாதம் மூன்றும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெறும். விண்ணப்பத்தில் 1. பெயர் 2. வயது 3. எழுத விரும்பும் தேர்வு 4. தேர்வு எழுத விரும்பும் இடம் 5. படிப்பு முதலிய விவரங்கள் எல்லாம் எழுதப்பெற்றிருக்க வேண்டும். தேர்வுக்குரிய நூல்கள் அடைப்புக்குறியில் காணப்பெறும் இடங்களில் கிடைக்கும். அவைகளின் முகவரிகள் வருமாறு 1. ஆறுமுக நாவலர் அச்சியந்திரசாலை 300, தங்கசாலைத் தெரு, சென்னை-1. 2. தென்னிந்திய சைவ சித்தாந்தக் கழகம், பிராட்வே, சென்னை-1. 3. அம்பை நூலகம், 7 A/1, கோவிந்தன் ரோடு, மேலைமாம்பலம், சென்னை-33. என்பதாகும்.

மதிப்புரை

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் குருபூஜை விழாமலர் வரப்பெற்றோம். பாம்பன் சுவாமிகளின் 40-ஆம் ஆண்டு குருபூஜை 5—6—69, 6—6—69 ஆம் நாள் சென்னை திருவான்மியூரை அடுத்த மயூராபுரத்தில் ஸ்ரீமத் சுவாமிகளின் சமாதியில் நிகழ்ந்தது. அதன் நினைவாக சுவாமிகளால் ஏற் படுத்தப்பெற்ற மகாதேஜோமண்டலக் கமிட்டியார் இம்மலரை வெளியிட்டுள்ளனர். இம்மலரின் முகப்புப் படம் பாம்பன் சுவாமிகளின் வரலாற்றுத் தொடர்புடையதாய் பிரப்பன்வலசை யில் சுவாமிகள் முருகன் அருள்பெற்ற தன்மையினை விளக்கும் பான்மையதாய் உள்ளது. மேலும் பாம்பன் சுவாமிகள் படம், தத்துவ விளக்கப்படம், கமல பந்தம் முதலிய படங்களும் இம்மலரை அணி செய்கின்றன.

இம்மலரில் பாம்பன் சுவாமிகளின் பெருமையைக் குறிக் கத்தக்க பல கட்டுரைகள் அடங்கியுள்ளன. ஸ்ரீமத் குமர குருதாச சுவாமிகள் தாண்டகம், விழுமியான், பாம்பன் சுவாமி களும் கார்த்திகைச் சுவாமிகளும், காசியும் காவியும் முதலிய 9 கட்டுரைகள் சிறந்த புலவர் பெருமக்களால் எழுதப்பட் டவை இம்மலருக்கு அணி செய்கின்றன. இம்மலரின் இறுதிப் பகுதியில் சுவாமிகள் அருளிச் செய்த பல பாக்களிலிருந்து "பாராயணத் திரட்டு" என்று 32 பாக்கள் தொகுத்து வெளி யிடப்பட்டிருக்கின்றது. மேலும் பாம்பன் சுவாமிகளைப் பற்றிய பல்வேறு செய்திகள் மலர்கின்றன. யாவரும் வாங்கிப் படித்து சுவாமிகளின் அருளைப்பெற வேண்டுகின்றோம் D/c. அளவில் 80 பக்கங்கள் கொண்டது. நல்ல அச்சு. விலை ரூ. 1-00. வேண்டுவோர்.— செயலாளர், மகாதேஜோமண்ட லக் கமிட்டி, பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் திருச் சந்நிதானம், மயூரபுரம், திருவான்மியூர், சென்னை-41 என்னு முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம் (அம்பை)

ஆவணித் திங்கள் சிறப்பு நாள்கள்.

5 (21-8—69) அனுடம் — குலச்சிறை நாயனார் விழா
7 (23-8—69) மூலம் — குங்குலியக்கலய நாயனார் விழா
23 (8—9—69) பூசம் — செருத்துணை நாயனார் விழா
24 (9—9—69) ஆயிலியம் – புகழ்த்துணை நாயனார் விழா
" " — அதிபத்த நாயனார் விழா
25 (10-9—69) மகம் — இளையான்குடி மாற நாயனார் விழா
27 (12-9—69) உத்திரம் — மறைஞான சம்பந்தர் விழா

பிற செய்திகள்

திருச்சி திரு. சொ. கிருஷ்ணன் அவர்கள் மகள் திருவளர் செல்வி சிவகாமசுந்தரிக்கும் புளியறை திரு. வைத்தியநாத பிள்ளை அவர்கள் மகன் திருவளர் செல்வர் திரு. தீர்த்தாரப்பனுக்கும் திருமணம் சிறப்பாக 25—6—69ல் திருச்சியில் நிகழ்ந்தது. புதுமணத் தம்பதிகள் எல்லாம் வல்ல பெருமானருளால் நன்னலங்கள் பல பெற்று நீடுவாழ அவனருளை வேண்டி வணங்கி வாழ்த்துகிறோம்.

ம கி ழ் ச் சி

நம் சமாஜப் பழம் பேரன்பர் இராஜபாளையம் திரு. கு. நல்லகுற்றாலம் பிள்ளையவர்கள் தம் சொந்த வீடாகிய 110, பிள்ளையகம், ஆலைப்பெருவழி, இராசபாளையம் என்பதையும் மற்றுமுள்ள தாவர சொத்துக்களையும் (மொத்த மதிப்பு ரூ. 49,000) தம்மால் நிறுவப் பெற்ற வள்ளுவப்பண்ணைக்கு எழுதிவைத்து அதன் மூலம் நம் மொழி, சித்தாந்த சைவம், பண்பாடு ஆகியவற்றை வளர்க்க வழி வகுத்துள்ளமை தெரிந்து மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். ஆயிரம் பிறை கண்ட அண்ணலாராம் திரு. பிள்ளையவர்கள் தொண்டு சிறக்க இறைவனின்னருள் சுரப்பாளுக.

ம தி ப் பு ரை

கடவுளைக் குறித்த வியாசம் என்னும் நூல் ஒன்று வரப்பெற்றோம். இது பாம்பன் ஸ்ரீமத் குமாரகுருதாச சுவாமிகளால் எழுதப்பெற்றது. ஸ்ரீமத் சுவாமிகள் 32 கட்டுரைகள் பல்வேறு பொருள்களைப் பற்றி எழுதி யுபகரித்துள்ளார்கள். அவற்றுள் முதன்மையாயுள்ளது கடவுளைக் குறித்த வியாசமாகும்.

கடவுளே யில்லையென்று கூறும் உபாாக சாரங்கன் என்பவனுக்கு அவன் ஐயங்களைப் போக்கிக் கடவுளைப் பற்றித் தெளிந்த அறிவு ஏற்படும் வகையில் வினு விடை முகத்தான் அமைந்தது இந்நூலாகும். இந்நூலில் குருவினிடம் உபாாக சாரங்கன் 42 வினக்கள் கேட்கிறான். அவற்றிற்குத் தக்க விடைகளையும் படித்து அமைதி பெறுவதோடு கடவுளைப் பற்றிய தெளிந்த அறிவையும் யாவரும் பெறலாம். இத்தகைய நூல் இக்காலத்து மிகவும் வேண்

டற்பாலது. இந்நூலை சுவாமிகளின் அடிமையாய V. அரங்க நாயகி அம்மையார் தம் சொந்தப் பொருட் செலவில் வெளி யிட்டுள்ளார்கள். கிரௌன் அளவில் 66 பக்கங்கள் கொண் டது. பிரம்ம நியமம், காரிய சரீர பாவனை, சூட்சும சரீர பாவனை ஆகிய மூன்று குறித்து அருமையான விளக்கப் படங்களை சுவாமிகளே வரைந்திருக்குந் திறம் மிகவும் படித் தறிந்தின்புறத்தக்கது. விலை ரூ. 1-25. வேண்டுவோர்:—

V. அரங்கநாயகி அம்மாள், குமரகுரு நூலகம், 2. புஷ் பாவதி அம்மாள் தெரு, மேலைமாம்பலம், சென்னை-33.

என்னும் முகவரிக்கு எழுதி நூலைப் பெற்றுக்கொள்ளலாம்.

(அம்பை)

சிவானந்த லகரி என்னும் நூல் ஒன்று வரப் பெற்றோம். வடமொழியில் ஸ்ரீமத் சங்கராச்சாரியார் அருளிச்செய்ததை கோவை, கவிராசு வித்துவான் கு. நடேசக் கவுண்டர் அவர்கள் செம்பாகமான கவிகளில் தமிழாக்கம் செய்துள்ளது மிகவும் போற்றத்தக்கதும் வர வேற்கத்தக்கது மாகும். இந்நூலில் எல்லாம் வல்ல சிவபரம் பொருளின் போற்றலின் பெருமையை யாண்டும் காணலாம். விருத்தமென்னும் ஒண்பாக்களில் ஒரு நூற்றினைக் கொண்டு இந்நூலிலங்குகின்றது. யாவரும் படிக்கவேண்டிய சிறந்த நூல்; வாங்கிப் படித்தின்புறுக.

நூல் கிடைக்குமிடம் :—

வித்துவான் கு. நடேசக் கவுண்டர் P. O. L.,
8/84, காந்திபுரம் நான்காவது வீதி,
கோயம்புத்தூர்-12.

கிரௌன் அளவு 34+10 பக்கங்களோடு கூடிய இந் நூலின் விலை குறிக்கப்பெற வில்லை. 75 காசுகள் தபால்தலை அனுப்பினால் வெளியூர் அன்பர்களுக்கு அஞ்சல் மூலம் இந் நூலை அனுப்பிவைப்பார்கள்.

(அம்பை)

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madrds by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Publishea by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.